**தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**

**முன்னிலை : திருமதி.T.S.P. ஜெயசுதா, M.L., (TN01090)**

**தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், தேனி.**

**2026ம் ஆண்டு ஜூலை திங்கள் 03ஆம் நாள் வெள்ளிக்கிழமை.**

**<u>அமர்வு வழக்கு எண்.08/2025</u>**

**(CNR No. TNTH02 – 000464 – 2025)**

| | | | |
|---|---|---|---|
| 01. | குற்றம் முறையிடுபவர் | : | தமிழ்நாடு மாநில அரசு சார்பாக – காவல் ஆய்வாளர், தேனி காவல் நிலையம், குற்ற எண்.196/2022 |
| 02. | குற்றம் சாட்டப்பட்டவர் பெயர், வயது, தந்தை பெயர் மற்றும் முகவரி | : | ஜெயகுரு (வயது 42/2022)<br>த/பெ. தர்மர்,<br>விஸ்வதாஸ் காலனி முதல் தெரு, தேனி. |
| 03. | சம்பவ நாள் | : | 12.06.2022 |
| 04. | புகார் நாள் | : | 12.06.2022 |
| 05. | எதிரி கைது செய்யப்பட்ட நாள் | : | 13.06.2022 |
| 06. | எதிரி பிணையில் சென்ற நாள் | : | 28.06.2022 (முதன்மை மாவட்ட நீதிமன்றம், தேனி Crl.M.P.No. 2253/2022, 24.06.2022–ஆம் தேதியிட்ட உத்தரவுப்படி பிணையில் சென்றுள்ளார்) |
| 07. | குற்ற இறுதி அறிக்கை நாள் | : | 29.07.2022 |
| 08. | குற்றம் சாட்டப்பட்டவர் மீதான குற்றச்சாட்டுகள் | : | எதிரியின் மீது இ.த.ச. பிரிவுகள். 294(b), 324, 307–ன்கீழ் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. |
| 09. | எதிரிகள் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் | : | <u>முதலாவதாக,</u><br>எதிரி வாதியின் வீட்டிற்குச் சென்று வாதியை அசிங்கமாக பேசி திட்டியதற்காக – இ.த.ச. பிரிவு. 294(b)–ன் படியான குற்றச்சாட்டு. |



JAYASUDHA T S P
Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.03 11:23:46 +0530

| | | | |
|---|---|---|---|
| | | | <u>இரண்டாவதாக</u>, எதிரி அபாயகரமான ஆயுதமான அருவாளால் வாதியை தாக்கி கொலை முயற்சி செயலில் ஈடுபட்டதற்காக – இ.த.ச. பிரிவு 307–ன்படியான குற்றச்சாட்டு. <u>மூன்றாவதாக</u>, எதிரி வாதியை வெட்டும் போது அதை தடுக்க வந்த எதியின் மனைவியான சண்முகபிரியாவிற்கு சாதாரண காயத்தை எற்படுத்தியதற்காக – இ.த.ச. பிரிவு 324–ன்படியான குற்றச்சாட்டு. |
| 10. | எதிரியின் பதில் | : | பொய் வழக்கு, எதிர்வாதம் செய்ய வேண்டும். |
| 11. | வழக்கின் விசாரணை தொடங்கிய நாள் | : | 11.02.2026 |
| 12. | வழக்கின் விசாரணை முடிவுற்ற நாள் | : | 23.06.2026 |
| 13. | நீதிமன்றத்தின் தீர்மானம் | : | எதிரியின் மீது சுமத்தப்பட்ட இ.த.ச. பிரிவுகள்.294(b), 307, 324–ன்கீழ் எதிரி குற்றவாளி இல்லை எனத் தீர்மானிக்கப்பட்டது. |
| 14. | தீர்ப்பும் தண்டனையும் | : | **முடிவாக,** எதிரியின் மீது சுமத்தப்பட்ட இ.த.ச. பிரிவுகள். 294(b), 307, 324–ன்கீழ் எதிரி குற்றவாளி இல்லை எனத் தீர்மானிக்கப்பட்டு எதிரியை கு.வி.மு.ச. பிரிவு 232 ன்கீழ் விடுதலை செய்து தீரப்பளிக்கப்படுகிறது. JAYASUDHA T S P Digitally signed by JAYASUDHA T S P Date: 2026.07.03 11:23:53 +0530 |

| | | | |
|---|---|---|---|
| | | | இவ்வழக்கில் ஆர்.பி.ஆர்.எண். 26/2025–ல் தாக்கல் செய்யப்பட்ட மரக்கைப்பிடி 10 செ.மீ, இரும்பு பூண் 2 செ.மீ, வெட்டும் வளைந்த இரும்பு பாகம் 26 செ.மீ, மொத்தம் 38 செ.மீ நீளமுள்ள அருவாள் சா.பொ.1ஐ மேல்முறையீட்டு காலத்திற்குப் பின் அழிக்க உத்தரவிடப்படுகிறது. |
| 15. | வழக்கின் ஆவணங்களின் நகல்கள் எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்ட நாள் | : | 04.01.2025 |
| 16. | காலதாமதத்திற்கான காரணம் | : | – இல்லை – |

இவ்வழக்கு 30.01.2025ம் தேதியன்று தேனி முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, நீதிமன்ற நடவடிக்கை எண்.623/2025, நாள். 31.01.2025–ன்படி இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு, இந்நீதிமன்றம் முன்பாக 23.06.2026ஆம் தேதியில் விசாரணைக்காக வந்த போது அரசு தரப்பில் கூடுதல் குற்றவியல் வழக்கறிஞர் திருமதி. V. அமுதா அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. C. விஜய் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பும் கேட்கப்பட்டு, சாட்சியங்கள், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்துவந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் ஆராய்ந்து வழங்கும்,

## <u>தீர்ப்புரை</u>

### 01. <u>குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்:–</u>

இவ்வழக்கின் வாதி கண்ணன் தேனி, சிவாஜி நகரில் விஸ்வதாஸ் காலனியில் குடியிருந்து பைனான்ஸ் தொழில் செய்து வருகிறார். வாதியின் வீட்டருகே எதிரி ஜெயகுருவும், அவரது மனைவி சண்முகபிரியாவும் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறார்கள். கடந்த சில மாதங்களாக ஜெயகுரு என்பவர் வாதியையும்,



JAYASUDHA T S P
Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.03 11:24:09 +0530

எதிரியின் மனைவி சண்முகபிரியாவையும் சம்மந்தப்படுத்தி பேசி பிரச்சனை செய்து வந்துள்ளார். இந்நிலையில் வாதி வீட்டில் எதிரியின் மனைவி இருந்த போது எதிரியின் மகன் நித்தீஸ் என்பவர் அவரது அம்மாவை தேடி வாதியின் வீட்டிற்கு சென்றிருந்தபோது எதிரி ஜெயகுரு என்பவர் ஏற்கனவே இருந்த முன்விரோதத்தை மனதில் வைத்துக்கொண்டு 12.06.2022—ஆம்தேதி இரவு 09.00 மணியளவில் வாதியின் வீட்டிற்குச் சென்று வாதியுடன் வாக்குவாதம் ஏற்பட்டு வதியைப் பார்த்து தேவிடியா மகனே, அவுசாரி மகனே என்று ஆபாசமாக பேசி வீட்டின் முன் அறையில் இருந்த அருவாளை எடுத்து வாதியை இத்தோடு செத்து தொலைந்து போடா என்று அருவாளால் வெட்டியதில், வாதிக்கு இடது கை மோதிர விரல், நடுவிரல், வலதுகை மோதிர விரலில் கொடுங்காயத்தை ஏற்படுத்தியும், வாதியை வெட்டும்போது தடுக்க வந்த சண்முகபிரியாவிற்கு இடது பக்க கீழ் உதட்டிலும், முதுகிலும் மற்றும் இடது முன் கையிலும் சாதாரண காயத்தை உண்டுபண்ணியும் குற்றம் புரிந்துள்ளார். எனவே எதிரி மீது இ.த.ச. பிரிவுகள்.294(b), 307 மற்றும் 324—ன்கீழ் அவர் தண்டிக்கப்படவேண்டியவர் என்று காவல் ஆய்வாளர், தேனி காவல் நிலையம் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

02. மேற்படி குற்ற இறுதி அறிக்கையானது தேனி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு, எதிரி ஆஜரானவுடன் எதிரிக்கு வழங்கப்பட வேண்டிய அரசு தரப்பு வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. பிரிவு. 207—ன்படி வழங்கப்பட்டுள்ளது.

03. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.9 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.17 வரையிலான சான்றாவணங்கள் மற்றும் சா.பொ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணம் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

JAYASUDHA T S P
Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.03 11:24:15 +0530

04. **<u>அரசு தரப்பு வழக்கு மற்றும் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம் பின்வருமாறு :–</u>**

(i) இந்த வழக்கில் அ.சா.1 முதல் அ.சா.9 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர்.

(ii) இவ்வழக்கில் அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகள் வழக்கு சம்பவம் பற்றி தங்களுக்குத் எதுவும் தெரியாது என்றும், வழக்கு சம்பவத்தை தாங்கள் நேரடியாக பார்க்கவில்லை என்றும், போலீசார் தங்களை விசாரிக்கவில்லை என்றும் கூறி அரசுத்தரப்பில் பிறழ் சாட்சிகளாக மாறியுள்ளார்கள்.

(iii) இவ்வழக்கில் விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.9 இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி ஆவார். அவர் தனது முதல் விசாரணையில் தான் தற்பொழுது திண்டுக்கல் மாவட்டம் மதுவிலக்கு காவல் பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 12.06.2022–ம்தேதி தேனி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்த சமயத்தில் சார்பு ஆய்வாளர் திரு.முருகானந்தம் அவர்கள் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை குற்ற எண்.196/2022 சட்டப்பிரிவு. 147, 148, 294(b), 324, 307 இ.த.ச.ஆக பதிவு செய்யப்பட்ட வழக்கை பார்வையிட்டு 13.06.2022–ம்தேதி 00.30 மணிக்கு சம்பவ இடமான தேனி விஸ்வதாஸ் காலனி 2வது தெருவில் உள்ள வாதியின் வீட்டு முன்பு சாட்சிகள் பாஸ்கரன், வினோத் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், சம்பவ இடத்தில் வைத்து மேற்கூறிய தேதியில் 01.40 மணியளவில் சாட்சிகள்



JAYASUDHA T S P
Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.03 11:24:21 +0530

பாஸ்கரன், வினோத் ஆகியோர்கள் முன்னிலையில் இவ்வழக்கு சொத்தான 38 செ.மீ நீளமுள்ள அருவாளை கைப்பற்றி அத்தாட்சி தயார் செய்ததாகவும், பின்னர் சாட்சிகளான கண்ணன், கோவிந்தராஜ், உமா மகேஸ்வரி ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர் வழக்கின் எதிரியை தவிர மற்ற எதிரிகள் வழக்கில் சம்பந்தப்படாததால் சட்டப்பிரிவு மாறுதல் மற்றும் எதிரி நீக்கம் அறிக்கை தயார் செய்ததாகவும், அன்றைய தினமே 11.00 மணிக்கு எதிரி ஜெயகுரு த/பெ.தர்மன் என்பவரை சாட்சிகள் பாஸ்கரன், வினோத் ஆகியோர்கள் முன்னிலையில் கைது செய்து எவ்வித துன்புறுத்தலோ ஆசை வார்த்தையின்றி அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்ததாகவும், 14.06.2022-ம்தேதி சாட்சிகளான சண்முகபிரியா, சாந்தி, சக்திவேல் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், 29.07.2022-ம்தேதி வழக்கில் காயம்பட்ட வாதிக்கு சிகிச்சையளித்த வேலம்மாள் மருத்துவமனை மருத்துவர் திரு.ராம்கிருபாகர் தங்கராஜ் என்பவரிடம் காயச்சான்று பெற்று அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர் இவ்வழக்கில் காயம்பட்ட சண்முகபிரியா என்பவருக்கு சிகிச்சையளித்த நட்டாத்தி மருத்துவமனை மருத்துவர் திரு.ராஜசேகரன் என்பவரிடம் காயச்சான்றிதழ் பெற்று அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர் மற்ற வழக்கு சாட்சிகளான சன்னாசி, பாஸ்கரன், வினோத் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர் வழக்கு பதிவு செய்த சார்பு ஆய்வாளரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர் தனது புலன் விசாரணையை முடித்துக்கொண்டு எதிரி மீது சட்டப்பிரிவு 294(b), 324, 307 இ.த.ச.ஆக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்ததாகவும், தனக்கு பின்னர் வந்த புலன்



JAYASUDHA T S P
Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.03 11:24:27 +0530

விசாரணை அதிகாரியான வெங்கடாசலாபதி அவர்கள் மேற்கொண்டு விசாரணை செய்து சாட்சிகள் பாண்டியன், கண்ணிமார் செல்வி, வளர்மதி, அழகேந்திரன், முத்துசாமி ஆகியோர்களை விசாரணை செய்து தனது புலன் விசாரணை முடித்து எதிரி ஜெயகுரு மீது சட்டப்பிரிவு 294(b), 324, 307 இ.த.ச படி தனது இறுதியறிக்கையினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததாகவும், இவ்வழக்கின் புகார் **அ.சா.ஆ.6** என்றும், முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.7** என்றும், பார்வை மகஜர் **அ.சா.ஆ.8** என்றும், மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.9** என்றும், எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.10** என்றும், அத்தாட்சி **அ.சா.ஆ.11** என்றும், படிவம் 91 **அ.சா.ஆ.12** என்றும், கண்ணன் என்பவரின் காயச்சான்று **அ.சா.ஆ.13** என்றும், சண்முகப்பிரியா என்பவரின் காயச்சான்று **அ.சா.ஆ.14** என்றும், போலீஸ் இண்டிமேசன் **அ.சா.ஆ.15** என்றும், சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.16** என்றும், எதிரி நீக்கல் அறிக்கை **அ.சா.ஆ.17** என்றும், இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட அருவாள் **சா.பொ.1** என்றும் கூறி சாட்சியமளித்துள்ளார்.

(iv) இவ்வழக்கில் எதிரிக்கு எதிரான அரசுத்தரப்பு வழக்கு என்பது அவருக்கு தனது மனைவி மற்றும் வாதியின் பழக்கம் பொறுத்து சந்தேகத்தால் ஏற்பட்ட முன்விரோதம் இருந்து வந்த நிலையில் கடந்த 12.06.2022–ம்தேதி இரவு 09.00 மணியளவில் எதிரியானவர் வாதியின் வீட்டிற்குச் சென்று வாதியுடன் வாக்குவாதம் ஏற்பட்டு வதியைப் பார்த்து தேவிடியா மகனே, அவுசாரி மகனே என்று ஆபாசமாக பேசி வீட்டின் முன் அறையில் இருந்த அருவாளை எடுத்து வாதியை இத்தோடு செத்து தொலைந்து போடா என்று அருவாளால் வெட்டியதில், வாதிக்கு இடது கை மோதிர



JAYASUDHA T S P
Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.03 11:24:42 +0530

விரல், நடுவிரல், வலதுகை மோதிர விரலில் கொடுங்காயத்தை ஏற்படுத்தியும், வாதியை வெட்டும்போது தடுக்க வந்த சண்முகபிரியாவிற்கு இடது பக்க கீழ் உதட்டிலும், முதுகிலும் மற்றும் இடது முன் கையிலும் சாதாரண காயத்தை உண்டுபண்ணியும் குற்றம் புரிந்துள்ளார். எனவே எதிரி மீது இ.த.ச. பிரிவுகள். 294(b), 307 மற்றும் 324–ன்கீழ் தண்டிக்கப்பட வேண்டியவர் என்பதாகும்.

(vi) இவ்வழக்கில் எதிரியின் மீது இந்நீதிமன்றம் மேற்சொன்ன அதே பிரிவுகளின் கீழ் குற்றச்சாட்டு வனைந்துள்ளது. இவ்வழக்கின் சாட்சிகளின் சாட்சியத்தை பரிசீலித்த வகையில் இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட நபர் அ.சா.1ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். இவர் தனது சாட்சியத்தில் சம்பவம் எதுவுமே நடக்கவில்லை என்று அரசுத்தரப்பிற்கு எதிராக பிறழ்ந்து சாட்சியமளித்துள்ளார். மேலும் இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட மற்றொரு நபரான சண்முகபிரியா அ.சா.4ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். இவர் எதிரியின் மனைவி. இவரும் சம்பவம் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றும், தனக்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார். இவரும் அரசுத்தரப்பில் பிறழ் சாட்சியாக கருதப்பட்டுள்ளார். இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட இரண்டு நபர்களுமே அரசுத்தரப்பில் பிறழ் சாட்சிகளாக உள்ளனர்.

(vii) வழக்கில் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள அ.சா.2, அ.சா.3 மற்றும் அ.சா.5 ஆகியோர்களும்



JAYASUDHA T S P
Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.03 11:24:47 +0530

சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளனர். எனவே இவர்களும் அரசுத்தரப்பில் பிறழ்சாட்சிகளாக கருதப்பட்டுள்ளனர்.

(viii) இவ்வழக்கின் விசாரிக்கப்பட்ட மற்ற சாட்சிகள் சம்பவத்தை கேள்விபட்ட சாட்சிகள், பார்வை மகஜர் சாட்சிகள், மருத்துவ அலுவலர்கள் மற்றும் வழக்கின் விசாரணை அதிகாரி ஆவர். எனவே, அரசுத்தரப்பு வழக்கை எவ்வித சாட்சிகளின் சாட்சியத்தின் மூலமும் உறுதிப்படுத்தப்படாத நிலையில் இந்நீதிமன்றம் எதிரிக்கு எதிரான அரசுத்தரப்பு வழக்கு ஐயத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்ற முடிவிற்கு வருகிறது.

**முடிவாக,** இந்நீதிமன்றம் எதிரியை இ.த.ச. பிரிவுகள். 294(b), 307, 324–ன்கீழ் குற்றவாளி இல்லை எனத் தீர்மானித்து எதிரியை கு.வி.மு.ச. பிரிவு 232–ன்கீழ் விடுதலை செய்து தீரப்பளிக்கிறது.

வழக்கில் **ஆர்.பி.ஆர்.எண். 26/2025–ல்** தாக்கல் செய்யப்பட்ட மரக்கைப்பிடி 10 செ.மீ, இரும்பு பூண் 2 செ.மீ, வெட்டும் வளைந்த இரும்பு பாகம் 26 செ.மீ, மொத்தம் 38 செ.மீ நீளமுள்ள அருவாள் சா.பொ.1ஐ மேல்முறையீட்டு காலத்திற்குப் பின் அழிக்க உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் விரிவாக்கம் செய்யப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால்

JAYASUDHA T S P Digitally signed by JAYASUDHA T S P Date: 2026.07.03 11:25:00 +0530

சரிபார்க்கப்பட்டு, இன்று 2026–ம் ஆண்டு ஜூலை திங்கள் 03–ம் தேதி என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

JAYASUDHA T S P Digitally signed by JAYASUDHA T S P Date: 2026.07.03 11:25:06 +0530

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், தேனி.

01. <u>அரசு தரப்பு சாட்சிகள்</u> :–

| | | | |
|---|---|---|---|
| 1) | அ.சா.1 | : | கண்ணன் |
| 2) | அ.சா.2 | : | கோவிந்தராஜ் |
| 3) | அ.சா.3 | : | உமாமகேஷ்வரி |
| 4) | அ.சா.4 | : | சண்முகபிரியா |
| 5) | அ.சா.5 | : | சாந்தி |
| 6) | அ.சா.6 | : | பாஸ்கரன் |
| 7) | அ.சா.7 | : | சன்னசி |
| 8) | அ.சா.8 | : | வினோத் |
| 9) | அ.சா.9 | : | மாயராஜலட்சுமி (காவல் ஆய்வாளர்) |

02. <u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u> :–

| வரிசை எண் | ஆவண வரிசை எண் | : | தேதி | ஆவணங்களின் விபரங்கள் | யார் மூலம் கு.செ. |
|---|---|---|---|---|---|
| 1) | அ.சா.ஆ.1 | : | 12.06.2022 | புகார் மனுவில் உள்ள கண்ணன் என்பவரின் பெருவிரல் ரேகை | அ.சா.1 |
| 2) | அ.சா.ஆ.2 | : | 13.06.2022 | பார்வை மகஜரில் உள்ள பாஸ்கரன் என்பவரின் கையெழுத்து | அ.சா.7 |
| 3) | அ.சா.ஆ.3 | : | 13.06.2022 | அத்தாட்சியில் உள்ள பாஸ்கரன் என்பவரின் கையெழுத்து | அ.சா.7 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4) | அ.சா.ஆ.4 | : | 13.06.2022 | பார்வை மகஜரில் உள்ள வினோத் என்பவரின் கையெழுத்து | அ.சா.8 |
| 5) | அ.சா.ஆ.5 | : | 13.06.2022 | அத்தாட்சியில் உள்ள வினோத் என்பவரின் கையெழுத்து | அ.சா.8 |
| 6) | அ.சா.ஆ.6 | : | 12.06.2022 | புகார் மனு<br>எதிரிகள் நீக்கம் அறிக்கை | அ.சா.9 |
| 7) | அ.சா.ஆ.7 | : | 12.06.2022 | அச்சு முதல் தகவல் அறிக்கை | அ.சா.9 |
| 8) | அ.சா.ஆ.8 | : | 13.06.2022 | பார்வை மகஜர் | அ.சா.9 |
| 9) | அ.சா.ஆ.9 | : | 13.06.2022 | மாதிரி வரைபடம் | அ.சா.9 |
| 10) | அ.சா.ஆ.10 | : | 13.06.2022 | ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி | அ.சா.9 |
| 11) | அ.சா.ஆ.11 | : | 13.06.2022 | அத்தாட்சி | அ.சா.9 |
| 12) | அ.சா.ஆ.12 | : | 13.06.2022 | படிவம் 91 | அ.சா.9 |
| 13) | அ.சா.ஆ.13 | : | 12.06.2022 | கண்ணன் என்பவரின் காயச்சான்று | அ.சா.9 |
| 14) | அ.சா.ஆ.14 | : | 12.06.2022 | சண்முகபிரியா என்பவரின் காயச்சான்று | அ.சா.9 |
| 15) | அ.சா.ஆ.15 | : | 12.06.2022 | காவல்துறை தகவல் பதிவுப் பேரேடு | அ.சா.9 |
| 16) | அ.சா.ஆ.16 | : | 13.06.2022 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை | அ.சா.9 |
| 17) | அ.சா.ஆ.17 | : | 13.06.2022 | எதிரி நீக்கல் அறிக்கை | அ.சா.9 |

**03. <u>அரசு தரப்பு சான்று பொருட்கள்</u> – .**

| வரிசை எண் | சான்று பொருள் எண் | : | தேதி | ஆவணங்களின் விபரங்கள் | யார் மூலம் கு.செ. |
|---|---|---|---|---|---|
| 1) | சா.பொ.1 | : | 13.06.2022 | மரக்கைப்பிடி 10 செ.மீ, இரும்பு பூண் 2 செ.மீ, வெட்டும் வளைந்த இரும்பு பாகம் 26 செ.மீ, மொத்தம் 38 செ.மீ நீளமுள்ள அருவாள் – 1. | அ.சா.9 |

JAYASUDHA T S P

Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.03 11:25:15 +0530

**04. <u>எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள்</u>–** இல்லை.

JAYASUDHA T S P
Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.03 11:25:21 +0530

தலைமை குற்றவியல் நீதித்துறை
நடுவர், தேனி.

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.

<u>அமர்வு வழக்கு எண்.08/2025</u>

<u>வழக்கின் சுருக்கம்</u>

<table>
<tr><td>i.</td><td>எதிரி அடைப்புக் காவலில் இருந்த காலம்</td><td colspan="3">16 நாட்கள்</td></tr>
<tr><td>ii.</td><td>குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கலான நாள்</td><td colspan="3">30.08.2022</td></tr>
<tr><td>iii.</td><td>வழக்கு அமர்வு நீதிமன்றத்திற்கு விசாரணைக்காக அனுப்பப்பட்ட நாள்</td><td colspan="3">31.01.2025</td></tr>
<tr><td>iv.</td><td>எதிரிக்கு எதிராக குற்றச்சாட்டு வினவப்பட்ட நாள்</td><td colspan="3">23.04.2025</td></tr>
<tr><td>8v.</td><td>வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட பல்வகை மனுக்களும் அவற்றின் முடிவும் (குவிமுச பிரிவு 317–ன் கீழான மனு நீங்கலாக)</td><td colspan="3">–</td></tr>
<tr><td rowspan="10">vi.</td><td rowspan="10">சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td>சாட்சிகள்</td><td>மு.வி.</td><td>கு.வி.</td></tr>
<tr><td>அ.சா.1</td><td>11.02.2026</td><td>11.02.2026</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>11.02.2026</td><td>11.02.2026</td></tr>
<tr><td>அ.சா.3</td><td>11.02.2026</td><td>11.02.2026</td></tr>
<tr><td>அ.சா.4</td><td>11.02.2026</td><td>11.02.2026</td></tr>
<tr><td>அ.சா.5</td><td>11.02.2026</td><td>11.02.2026</td></tr>
<tr><td>அ.சா.6</td><td>25.02.2026</td><td>25.02.2026</td></tr>
<tr><td>அ.சா.7</td><td>25.02.2026</td><td>25.02.2026</td></tr>
<tr><td>அ.சா.8</td><td>25.02.2026</td><td>25.02.2026</td></tr>
<tr><td>அ.சா.9</td><td>23.06.2026</td><td>23.06.2026</td></tr>
<tr><td>vii.</td><td>எதிரி கு.வி.மு.ச. பிரிவு 313–ன்கீழ் வினவப்பட்ட நாள்</td><td colspan="3">23.06.2026</td></tr>
<tr><td>viii.</td><td>எதிரி தலைமறைவாக இருந்த காலம் மற்றும் நீதிமன்றத்தில் ஆஜரான/ ஆஜர் படுத்தப்பட்ட காலம்</td><td colspan="3">–––</td></tr>
<tr><td>ix.</td><td>மேல் நீதிமன்றங்கள் வழங்கிய ஸ்டே உத்தரவு மற்றும் அதன் முடிவும்</td><td colspan="3">இல்லை</td></tr>
</table>

JAYASUDHA T S P

Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.03 11:25:29 +0530

| | | |
|---|---|---|
| x. | தீர்ப்புரை நாள் | 03.07.2026 |

JAYASUDHA T S P

Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.03 11:25:36 +0530

தலைமை குற்றவியல் நீதித்துறை
நடுவர், தேனி.

தலைமை குற்றவியல் நீதித்துறை

நடுவர் நீதிமன்றம், தேனி.

S.C. No.08/2025

தீர்ப்புரை நாள் 03.07.2026